# மே – 31 – வியாழன்

## தூய கன்னி மரியா புனித எலிசபெத் சந்திப்பு
## இறைவன் என் மீட்பர், அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், நான் அஞ்சமாட்டேன்: எசா. 12:2

### முதல் வாசகம்: செப்போனியா 3 : 14 – 18

மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி இஸ்ரயேலே! ஆரவாரம் செய் மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி.ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார் உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார் இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்.அந்நாளில் எருசலேமை நோக்கி இவ்வாறு கூறப்படும் "சீயோனே, அஞ்சவேண்டாம் உன் கைகள் சோர்வடைய வேண்டாம்.உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் அவர் மாவீரர் மீட்பு அளிப்பவர் உன்பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார் தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார் உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார். அது திருவிழாக் காலம்போல் இருக்கும். உனது துன்பத்தை அகற்றிவிட்டேன் ஆகவே, இனி நீ இழிவடையமாட்டாய்.

**பதில்பாடல் :** இரவேலின் துயவர் உங்களிடையே சிறந்து விளங்குகிறார்.

### நற்செய்தி: லூக்கா 1 : 39 - 56

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்துசென்றார்.அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்.மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்தகுரலில், "பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர் உம்வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே!என் ஆண்டவரின் தாய் என்னிடம்வர நான் யார்?உம் வாழ்த்துரை என்காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று.ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்றுநம்பிய நீர் பேறுபெற்றவர்" என்றார். அதைக்கேட்ட மரியா பின்வருமாறு கூறினார். "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என்மீட்பராம் கடவுளை நினைத்து எனதுமனம் பேருவகை கொள்கின்றது.ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்.ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்.
வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்".மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் விசுவாச வாழ்வு எப்படிப்பட்டது என்பதையும், அவ்விசுவாசத்தின் மூலம் அன்று முதிர்ந்த வயதிலும் கூட எலிசபெத்திற்கு குழந்தைப்பாக்கியத்தைக் இறைவன் கொடுக்கச் சித்தங் கொண்டாரோ அதே போன்று எமக்கும் இறைவன் நினையாத காரியங்களை செய்து முடிப்பார் என்பதை தெரிவுபடுத்துகின்றது. நாங்கள் விசுவாச வாழ்வு வாழவேண்டும், இறை வல்லமையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமேயானால் இறைவார்த்தையை வாசித்து அதன்படி வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தோமேயானால் எங்களுக்கும் பலவிதமான அற்புதங்களை செய்வார். நாங்கள் கேட்பதற்கு முன்பதாகவே எமது தேவைகளையும் சந்திப்பார். அன்று அன்னை மரியாள் எலிசபேத்தை சந்தித்து வாழ்த்தியபோது அவள் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு இறைவனது வல்லமையை நினைத்து மகிழ்கின்றாள். இவற்றின் மூலம் நம்பிக்கை, ஏற்றுக்கொள்ளும் மனத்திடன், தாழ்ச்சி என்னும் புண்ணியங்கள் மறைமுகமாக வெளிப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. தூய ஆவியானவரைப் பெற்றுக்கொண்டுள்ள நாங்களும் இறைவார்த்தையை வாசித்து அதன்படி வாழ்ந்தவர்களாக அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை…..அவ்வாறாக ஆவியானவரின் கனிகளை எமது வாழ்வில் கடைப்பிடித்து வந்தோமேயானால் அன்பு பகிரப்படும், உறவானது நிலைத்து காணப்படும். ஆனால் நாங்கள் இன்று எவ்வாறு வாழ்கின்றோம்? சிந்திப்போம். நாங்களோ எமக்கு நன்மைகள் ஏதாவது யாராவது செய்தால் மட்டுமே உதவி செய்கின்றோம், ஏதாவது ஒன்றை எதிர்பார்த்தே செய்கின்றோம். யாரும் உதவி கேட்காமலோ அல்லது எதிர்பாராமலோ செயறபடுவதில்லை. இவ்வாறு வாழாமல் வாழ்ந்து வந்தோமேயானால் "அடிமையின் தாழ்நிலையை ஆண்டவர் கண்ணோக்கினார்" (லூர்க்.1:48) என்று அன்னை மரியாள் பாடி மகிழ்ந்தது போன்று பாவிகளாகிய எமது தேவைகளையும் நினையாத வேளையில் இறைவன் தருவார் என்று விசுவசித்தவர்களாக என்றும் இறைவனை போற்றி மகிழ்ந்து பாடுவோம்.